Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – VI



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11478)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | சித்திரை 16 | 29-04-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை -70



ஆனையிறவு வெற்றி விழா – தீச்சுவாலை முறியடிப்பு

## தலைவரின் மதிநுட்பம் வாய்ந்த போரியல் திட்டத்தால் ஆனையிறவுப் படைத்தளம் வெற்றி கொள்ளப்பட்டது

**-கேணல் தீபன்**

(நமது நிருபர்)

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மதிநுட்பம் வாய்ந்த போரியல் திட்டத்தின் மூலமாகப் பலம் பொருந்திய ஆனையிறவு சிறிலங்கா படைத்தளம் தமிழீழ விடுதலைப்புலிகளினால் வெற்றிகொள்ளப் பட்டது என வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு மீட்பு, தீச்சுவாலை முறியடிப்பு ஆகியவற்றின் ஐந்தாம் ஆண்டு வெற்றிவிழாவின் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சியானது சிறிலங்காப் படைகளுக்கு மனோநிலை ரீதியாகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. ஏனெனில் மிகவும் உச்சக் கட்டப் பாதுகாப்போடு இருந்த ஒரு தளம் என்பதோடு, பல ஆண்டுகளாகக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தளம் தமிழீழ விடுதலைப்புலிகளினால் வீழ்த்தப்பட்ட தென்பது, சிறிலங்காப் படைகளுக்கு

(VIஆம் பக்கம் பார்க்க)

## இறுதி நாள் விளையாட்டுப் போட்டியும் மாலைநேர வெற்றிவிழா நிகழ்வுகளும்



ஆனையிறவுப் படைத்தள மீட்பும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரினதும் வெற்றிவிழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டன. நேற்றைய வெற்றி விழா நிகழ்வுகள் காலை 5.45 மணிக்கு போராளிகளின் மரதனோட்ட நிகழ்வோடு ஆரம்பமானது. பளை புதுக்காட்டுச் சந்தியில் ஆரம்பமான இம் மரதனோட்டப் போட்டியில் கனரக ஆயுதங்களைத் தாங்கியவாறு போராளிகள் இத்தாவில் வரை ஓடிப் போட்டியை நிறைவு செய்தனர்.

முன்னதாக இப்போட்டிகளில் பங்கு பற்றும் வீரர்களுக்கு விடுதலைப்புலிகளின் போர்ப்பயிற்சி ஆலோசகர் தினேஷ் அவர்கள் கைலாகு கொடுத்து பின் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து ஆனையிறவுப் பகுதியில்

(VIஆம் பக்கம் பார்க்க)

# பிரபல இராணுவ ஆய்வாளர் சிவராம் கொழும்பில் கடத்தப்பட்டார்



### பம்பலப்பிடியில் இன்டர்கூலரில் வந்தோர் வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றனர்

(கொழும்பு)

**பிரபல இராணுவ ஆய்வாளரும், ஊடகவியலாளருமான தராக்கி என அழைக்கப்படும் தர்மரெட்ணம் சிவராம் நேற்றிரவு கொழும்பு பம்பலப்பிட்டியில் வைத்து இன்டர் கூலர் வாகனத்தில் வந்தவர்களால் வலுக்கட்டாயமாகக் கடத்திச் செல்லப்பட்டார்.**

நேற்றிரவு தமிழீழ நேரப்படி சுமார் 10.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. தனது நண்பன் ஒருவருடன் அவர் வீதியில் வந்து கொண்டிருந்த வேளை அவருக்கு வந்த தொலைபேசி அழைப்பு ஒன்றிற்குத் தரித்து நின்று பதில் அளித்துக் கொண்டிருக்கையில் வாகனத்தில் வந்தவர்கள் வலுக் கட்டாயமாகக் கடத்திச் சென்றுள்ளனர்.

(VIஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் குயிலின்பனுடன் நேற்றுப் பேச்சு

அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பனுடன் அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர். தற்போதைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தினை மதித்துச் செயற்படுவதாகவும், சிறுவர் ஆட்சேர்ப்புத் தொடர்பான எவ்வித முறைப்பாடும் அண்மைக்காலத்தில் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் (VIஆம் பக்கம் பார்க்க)

## படை அதிகாரி காணாமல் போனது குறித்து எந்த நடவடிக்கையும் கண்காணிப்புக் குழு எடுக்காது

**–கண்காணிப்புக்குழு தெரிவிப்பு**

கல்கிஸ்ஸ காவல்துறையின் புலனாய்வு அதிகாரி ஜெயரட்ணம் காணமால் போனமை தொடர்பாகத் தமக்கு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. ஜெயரட்ணத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் கடத்திச் சென்றுள்ளதாகக் கூறி நேற்று முன்தினம் தேசிய பிக்கு முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதே இந்தக் கருத்துத் தெரிவிக்கப் பட்டது. தமக்கு இரண்டு தரப்புகளுக்கும் இடையில் தகவல்களைப் பரிமாற முடியும். இதனைத் தவிர வேறு நடவடிக்கைகளை எடுக்கமுடியாது என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வலியுறுத்தியது.

## இளைஞர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி அகதி முகாமில் வசித்து வந்த இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தின்போது சூட்டுக் காயங்களுக்கு இலக்கான முருகேசு வரதராசா என்ற அந்த நபர் மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையில்

(VIஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்க்கப்படாமைக்கு இரு பிரதான கட்சிகளுமே காரணம்

**மல்வத்த பீடாதிபதி தெரிவிப்பு**

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்க்கப்படாமைக்கு இரு பிரதான கட்சிகளுமே காரணமென மல்வத்தபீடாதிபதி சிறி சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சிறிலங்கா அரசாங்கமும், பிரதான எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படவேண்டுமெனத் தெரிவித்துள்ள அவர். இரு கட்சிகளும் முரண்பட்டுக் காணப்படும் நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதெனக் குறிப்பிட்டுள்ளார்.

# வரிவிளம்பரம்

## விற்பனைக்குண்டு

அமுதசுரபி குளிர்பருகை 497 யாழ்சாலை,கிளிநொச்சி. மேற்படி ஸ்தாபனத்தில் மின்பிறப்பாக்கி 3பேஸ், மின்இயக்க வெதுப்பகம் (கமிசன்அடிப்படையில்),தளபாட பொருட்கள் என்பன விற்பனைக் குண்டு (6084)

## விற்பனையாகிறது

இ.நிர்மலன் ஆசிரியர் விஞ்ஞான மும் தொழிநுட்பவியலும் தரம் 7 முதல் O/L வரை விரிவான பாடப் பரப்பு, பரீட்சை வழிகாட்டிகள், விஞ் ஞான விளக்கங்கள் மற்றும் இலவசப் பரீட்சை வினாத்தாள்கள் தரம் 1,2,3,4 அனைத்துப் பாடங் களும் அடங்கிய பரீட்சை வழிகாட்டிகள் வன்னியிலுள்ள அனைத்து அறிவமுது புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள் ளலாம். TP,0777413990 (6088)

## 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர் கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி, 5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்-எம்.நேசன் B.SC (H.B)

(சி.11779)

## வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரத்தில் அழககம் (சலூன்) ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். சம்பளம் பேசித்தீர்மானிக் கப்படும் தொடர்புகளுக்கு:- "பொதிகை அழககம்" கனகபுரம் தெரு, கிளி நொச்சி. (6072)

## கணனி, இலத்திரனியல் பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் நடாத்தப் படவிருக்கும் கணனிப்பயிற்சி, இலத்திரனியல் பயிற்சி நெறிக்கான நேர்முகத்தேர்வு 30.04.2005 அன்று காலை 9.30 மணிக்கு நடை பெறவிருப்பதால் விண்ணப்பித்தவர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**இடம்:**-பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்,பத்திமா சந்தி, 9 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

**குறிப்பு:**-இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கவும். (5836)

## தொழிலாளரின் பாதுகாவலர் புனித சூசையப்பர்

# திருவிழா - 01.05.2005

முல்லைத்தீவு

தொழிலாளர்களின் பாதுகாவலராம் புனித சூசையப்பர் திருவிழா மே மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இத்திருவிழா திருப்பலியிலும், 30ஆம் திகதி நற்கருணை விழாவிலும் கலந்து இறையாசீர் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**நற்கருணை விழா** - மாலை 4.30 மணி -30.04.2005 வைத்தியசாலை குழந்தையேசு ஆலயத்திலிருந்து புனித சூசையப்பர் ஆலயத்தினை நோக்கி செபமாலை பவனி நடைபெறும்

**திருவிழா - காலம்** - 01.05.2005 ஞாயிறு
- நேரம் - காலை 7.00 மணி
- இடம் - புனித சூசையப்பர் தேவாலயம் (எரிபொருள் நிரப்பும் நிலையம்)

பங்குத்தந்தையர்களும்,
பங்கு மக்களும்.

(சி.11825)

நிர்வாகத்தினர்
முல்லை,புனித சூசையப்பர் சிற்றாலயம்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட தொகுதி திருத்தல், சேர்த்தல், மேம்படுத்தல் நிறபூச்சு வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கான இக்ராட'(ICTAD) நிறுவனத்தில் தரம் 8 அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளர் நிர்வாகம் அவர்களிடமிருந்து 25.052005 வரை ஒப்பந்தக்காரர் பதிவுப் புத்தகத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1.மீளளிக்கப்படும் வைப்புத்தொகை | ரூபா | 25000.00 |
| 2.மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | ரூபா | 500.00 |

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சீல் பண்ணப்பட்டு வேலையின் பெயரை உறையின் (என்வலோப்) இடது மூலையில் குறிப்பிட்டு தலைவர், [illegible]விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிற்குக் கிடைக்கக் கூடி[illegible]ாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 30.05.2005 அன்று மாலை 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக அன்று மாலை 3.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப் பத்திரங்கள் திறக்கும் பொழுது பிரசன்னமாயிருக்க முடியும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் ப[illegible]சீலிக்க முடியும்.

தபால் பெட்டி இ[illegible] 57
திருநெல்வே[illegible]
யாழ்ப்பாண[illegible]

(சி.11826)

துணை வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# GTZ கொடுப்பனவு

2004ஆம் ஆண்டு துரித கற்றல் செயற்றிட்டத்தில் பங்கு பற்றித் தமக்குரிய கொடுப்பனவை இதுவரை பெற்றுக் கொள்ளாத கிளி, முல்லை, மடு, வவுனியா வடக்கு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் அனைவரும் 15.05.2005 ஆம் திகதிக்கு முன்வரும் வேலைநாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை கிளி/ வலயக்கல்விப் பணி மனையில் இயங்கும் GTZ அலுவலகத்தில் நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளு மாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கணக்குப்பகுதி
GTZ BESP / VERP

(சி.11822)

## CARITAS-HUDEC KILINOCHCHI

# VACANCY
# Field Officer

CARITAS-HUDEC is a **Humanitarian Organization.** Within the framework of its 2 years program for relief after tsunami disaster.
CARITAS-HUDEC needs a field offcer based in his office of kilinochchi.

**Job description**
Integrated to the Tsunami Team, he will report directly to the Field Coordinator. He Will assist in the **implementation** and **follow-up** of the construction part of our relief program in Vanni area

***Requirements***
- ★ Good experience as Field Officer
- ★ Building construction knowledge
- ★ Good drawing skills
- ★ Fluency in English
- ★ Ability to work on the field and fravel extensively
- ★ Good communication skills
- ★ Good team player
- ★ Computer skills (word, excel, internet...)
- ★ Diving License
- ★

please send your application (CV& cover letter in English) by Friday 06 th of May to:

Director Father peter
CARITAS-HUDEC Kilinochchi
Thirunagar,Kilinochchi

please specify the post you apply for on your application

(சி.11821)

## CARITAS-HUDEC KILINOCHCHI
## VACANCY
**Operational Program Coordinator**

CARITAS-HUDES is a **Humanitarian organization.** Within the tramework of its 2years program tor relief after tsunami disaster,
CARITAS-HUDEC needs afield officer based in his office of kilinochchi.


**Job description**
Integrated to the Tsunami Team, he will report directly to the Director and work closely with the program Adviser. In charge of the **implementation** and **follow-up** of the overall tsunami relief program in vanni area, he will be responsible of the set up under the CARITAS-HUDEC strategy.
He will **supervise** and **coordinate** a ream of about 15 people.

**Requirements**
- ★ Strong experience in program coordination
- ★ Flruency in English
- ★ Ability to work on the field and travel extensively
- ★ Good management skills
- ★ Good communication skills
- ★ Good team player
- ★ computer skills (word,excel, internet...)
- ★ Driving License

please send your application (CV& cover letter in English) by Friday 06 th of May to: Director Father peter
CARITAS-HUDEC Kilinochchi
Thirunagar,Kilinochchi

please specity the post you apply for on your application

(சி.11821)






ஆனையிறவு மீட்பு 5ம் ஆண்டு தீச்சுவாலை முறியடிப்பு 4ம் ஆண்
வெற்றி விழா
28-04-2005
வடபோர்முனை கட்டளை பணியகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

























ஆனையிறவு மீட்பு 5ம் ஆண்டு தீச்சுவாலை முறியடிப்பு 4ம் ஆண்டு
வெற்றி விழா






























# தமிழர் தேசம் விடுதலை பெற்றால் மட்டுமே தொழிலாளர் விடிவினைப் பெற்றிட முடியும்

## -யாழ்.மாவட்ட தே.எ.பேரவை மே நாள்அறைகூவல்

தமிழ் தொழிலாளர்களுடைய விடிவிற்கும், வாழ்வுக்கும் எமது நாட்டின் விடிவுதான் வழி அமைக்க முடியும். இந்த வகையில் எமக்கென்று ஒரு நாடு வேண்டும் என்பதற்காக மக்கள் இம்மண்ணில் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எமது வாழ்வுரிமைக்காகப் போராட்டத்தை முன்னெடுத்த நாம் இன்று இறுதிக்கட்டத்திற்கு வந்துள்ளோம் என யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை வெளியிட்டுள்ள "மே" நாள் செய்தியில் தெரிவித்துள்ளது.

சில இடங்களில் மேதினக் கூட்டங்கள் வெறும் அரசியலுக்காக நடாத்தப்படுகிறது. தமிழீழத்தில் நடைபெறுகின்ற "மே" நாள்க் கூட்டங்களானது தொழிலாளர்களின் நலனுக்காகவும், இருப்புக்காகவும் பாட்டாளி மக்களின் நலனுக்காகவும், மக்களின் வாழும் உரிமைக்காகவும் முன்னெடுக்கப்படுகின்றது. எமது நாட்டின் விடிவு தான் எமது தேசியத் தொழிலாளர்களின் விடிவாக அமையும் என்ற உறுதியுடன், ஒருமைப்பாட்டுடன் அனைத்து மக்களும் இணைந்து குரல் கொடுப்போம் வாரீர் எமது தேசத்தைப் பலப்படுத்துவோம் வாரீர்! அணிதிரள்வோம் வாரீர்! அணிதிரள்வோம் வாரீர் என யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை அறைகூவல் விடுக்கின்றது.

இதேவேளை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறைகூவலில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாண நகரில் நடைபெறும் மாபெரும் மே நாள் எழுச்சிப்பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் தமது அன்றாடப்பணிகளை சில மணித்தியாலம் இடைநிறுத்திக் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழரின் எழுச்சியைப் பறைசாற்ற தமிழ்த்தேசிய உழைப்பாளர் உயர சர்வதேச மே நாளில் ஒன்றிணைவோம். எமது பலத்தை மீண்டும் நிரூபிப்போம். யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஐந்து மே தினங்கள் வந்து போயின. ஆட்சியில் உள்ளவர்கள் என்ன செய்தார்கள்? இன்னும் எத்தனை நாளைக்குப் பொறுமை காப்பது? எங்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியதா? எங்களின் அகதி வாழ்வுக்கு முடிவு கிட்டியதா? எங்களின் வாழ்விடங்களிலிருந்து இராணுவம் விலகியதா? எங்களின் கடலினில் எங்கள் நிலத்தில் தொழில் செய்ய முடிந்ததா? எங்களின் நிலத்தில் ஏன் உயர்பாதுகாப்பு வலயம்? இலங்கை அரசே பதில் கூறு. இதற்கு ஒரு முடிவு கட்டும் நாளாக எதிர்வரும் "மே" தினம் அமையட்டும் அனைத்துத் தொழிற்சங்கங்களும் தமிழ்த்தேசியத்தின் கீழ் அணிரதிண்டு தமது உரிமைக் குரலை உலகறியச் செய்வோம் என அதில் கேட்கப்பட்டுள்ளது.

யாழ். நல்லூர் மகளிர் அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள "மே" நாள் செய்தியில் இத்தினத்திலே தமிழீழப் பெண்களாகிய நாம் அடக்கு முறையிலிருந்து எமது தேசியத்தைக் காக்கும் பொருட்டு அனைவரும் கிளர்ந்தெழ வேண்டியது அவசியமாகின்றது.

சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கான நிவாரணப்பணிகள், புனர்வாழ்வு என்பனவற்றை செயற்படுத்தாமல் அரசு புறக்கணித்து வருகின்றது.

தமிழினத்தின் உணர்வுகளை சர்வதேச சமூகத்திற்கும், பேரினவாதிகளுக்கும் எடுத்துக்காட்டும் பொருட்டு அனைத்து தமிழீழப் பெண்களும் குரல் கொடுக்க இணைந்து வாருங்கள். எங்களது பேரணியில் அனைவரும் ஒன்று திரண்டு சிங்களப்பேரினவாத அரசிற்கு எமது மகளிர் பலத்தை எடுத்துக்காட்டுவதற்கு அனைவரும் அணிதிரள்வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பானிய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பொருட்கள் திருட்டு

வவுனியா கற்பகபுரத்தில் ஜப்பானிய கண்ணி வெடியகற்றும் பிரிவு மிதிவெடிகளைத் துப்புரவு செய்து அடையாளம் இடப்பட்டிருந்த அடையாளம் காட்டும் பொருட்களை இனம் தெரியாதவர்கள் சூறையாடிச் சென்றிருப்பதாக பொலிசில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுவருடத்தினை முன்னிட்டு விடுமுறை விடப்பட்டிருந்த சமயமே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது 15 கம்பித்தூண்களும், 1000 மீற்றர் நீளமான பட்டியும் களவு போயிருப்பதாகவும் ஏற்கனவே துப்புரவு செய்யப்பட்டிருந்த பகுதி மீண்டும் அடையாளப்படுத்த வேண்டியிருப்பதாகவும் பொறுப்பதிகாரி நாகராசா நவநீதன் தெரிவித்துள்ளார். (21)

# மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள நடமாடும் சேவை இன்றும், நாளையும்

(அலுவலக செய்தியாளர்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் இன்னும் நாளையும் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்படும் நடமாடும் சேவையில் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆவணங்கள். தவறவிடப்பட்டு இதுவரை பதிவுகள் மேற்கொள்ளப்படாத மோட்டார் வானங்களுக்குரிய பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் பயன்பெறவுள்ளவர்கள் தவறாது இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் அவர் வேண்டியுள்ளார்.

மற்றும் இன்றும், நாளையும் நடைபெறவுள்ள உந்துருளி செயன்முறைப்பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் உந்துருளிக்குரிய உரிமம், உந்துருளிக்குரிய காப்புறுதி, தலைக்கவசம், தேசிய அடையாள அட்டை, பாதுகாப்பு கீாப்புறுதி (அவசியமானவிடத்து) ஆகியவற்றுடன் வருகைதரும் வண்ணம் வேண்டியுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும் மோட்டார் போக்குவரத்து நடமாடும் சேவைக்கென 32 அதிகாரிகள் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு வருகை தந்துள்ளனர்.

மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் பி.விஜயரத்ன, உதவி ஆணையாளர் ஏ.டபிள்யூ திசாநாயக்க மற்றும் சிரேஷ்ட, கனிஷ்ட மோட்டார் வாகனபரிசோதகர்கள், லிகிதர்கள் உட்பட 32 அலுவலர்கள் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் இன்றும், நாளையும் கிளிநொச்சியில் நடைபெறும் நடமாடும் சேவையில் பணியாற்றவுள்ளனர். கிளி.அரச அதிபரின் வேண்டுகைக்கமைவாக முதன் முதலாக மோட்டார் போக்குவரத்து ஆணையர் உட்பட பெருமளவு அலுவலர்கள் கிளிநொச்சிக்கு வருகை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி.யில் மே தின ஊர்வலம் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து ஆரம்பம்

கிளிநொச்சியில் மேதின ஊர்வலங்கள் ஆரம்பமாகும் நேரம், இடங்கள், ஒழுங்குகள் குறித்து நேற்று முன்தினம் மேதின ஏற்பாட்டுக்குழு ஒன்றுகூடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அன்று மாலை 3 மணிக்கு கரடிப்போக்குச் சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பிக்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஊர்திகள் பிரதேச அணிகள் தரித்து நின்று புறப்படும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. D3 தென்னம் பிள்ளை ஆராய்ச்சி நிலையம், பராசக்தி தியேட்டர் வீதியில் வட்டக்கச்சி மக்களும், கூட்டுறவு சம்பந்தப்பட்டவர்களும்; பரவிப்பாஞ்சான் ஈஸ்வரன் தியேட்டர் வீதியில் கிளிநொச்சிப் பிரதேச மக்கள; கிளி/ புனித திரேசா பாடசாலை வீதியில் அதிபர்கள், ஆசிரியர்கள்; D5 பூநகரி வீதியில் நிறுவனம் சார்ந்த அமைப்பினர் நிறுவனத்தினர்; கணேசபுரம் பிரதான வீதியில் அரச உத்தியோகத்தர்; கரடிப்போக்கு உருத்திரபுரம் வீதியில் அக்கராயன் பிரதேச மக்கள், முழங்காவில் பூநகரி பிரதேச மக்கள்; A9 பிரதான வீதியில் விசுவமடு, பளை, பரந்தன் பிரதேச மக்கள்.

வாகனத் தரிப்பிடங்கள் வட்டக்கச்சி பகுதி வாகனங்கள் கிளி/ மகாவித்தியாலய வீதியிலும், அக்கராயன் பிரதேச வாகனங்கள் கிளிநொச்சி பழைய புகையிரத நிலையத்தின் முன்பாவுள்ள வீதியிலும், பூநகரி முழங்காவில் வாகனங்கள் S.R. மினித்தியேட்டரிலிருந்து திருநகர் வீதியிலும், கிளிநொச்சிப் பிரதேச வாகனங்கள் A9 பிரதான வீதியில் கச்சேரியடியிலிருந்து டிப்போ வீதியிலும், பளை, விசுவமடு, பரந்தன் பகுதி வாகனங்கள் A9 பிரதான வீதியில் ஆஸ்பத்திரி முன்பாகவும், உந்துருளிகள் பிரதேச சபையின் உட்கட்டப் பகுதியிலும், மிதிவண்டிகள் மைதானத்தின் ஒரு பகுதியிலும் வாகனங்கள் நிறுத்திவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஊர்வல ஒழுங்குகளாக முதலில் உந்துருளிப் பவனியும், இரண்டாவதாக பாண்ட் (குழு இசை பவனி)யும், மூன்றாவதாக கூட்டுறவாளர் ஊர்வலம் ஊர்தியும் அணியினரும், அதைத் தொடர்ந்து நிறுவனம் சார்ந்த அமைப்பு ஊர்தியும் அணியினரும் அதைத் தொடர்ந்து மிதிவண்டிகள், முச்சக்கர வண்டிகள், அக்கராயன் பிரதேச ஊர்திகளும் அணியினரும், முழங்காவில் பிரதேச ஊர்திகளும் அணியினரும், பூநகரிப் பிரதேச ஊர்திகளும் அணியினரும் அரச உத்தியோகத்தரும், ஆசிரியர்கள் அணியினரும், பளைப்பிரதேச ஊர்திகளும் அணியினரும், பரந்தன் பிரதேச ஊர்திகளும் அணியினரும், விசுவமடுப் பிரதேச ஊர்திகளும் அணியினரும், வட்டக்கச்சிப் பிரதேச ஊர்திகளும் அணியினரும், கிளிநொச்சிப் பிரதேச ஊர்திகளும் அணியினரும் செல்வர். வெற்றியீட்டும் முதல் மூன்று அணியினருக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும். அடுத்து சிறப்பாகக் காணப்படும் அணியினருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. ஊர்வலங்கள் மத்திய விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்ததும் மேதினக் கூட்டமும், விடுதலைப்புலிகளின் மகளிர் கலை பண்பாட்டுக் குழுவினரின் இசைக் குழு, விடுதலைப்புலிகளின் விசேட படையினரின் விசேட நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (சோ)


## அலுவலகப் பணியாளர் வெற்றிடம்

எமது ஸ்தாபனத்திற்கு அலுவலகப் பணியாளர் தேவையாக உள்ளதால் அவ் வெற்றிடத்திற்குக் கீழ்வரும் தகமையுடையோர் விண்ணப்பிக்கலாம்

* கரைச்சிப் பிரதேசத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்
* ஜீ/சி/ஈ/சா/ தரம் கற்றிருத்தல் வேண்டும்.
* 18 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
* உந்துருளி ஓடக் கூடியவராக இருத்தல் வேண்டும
* வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்கூறிய ஆவணங்களுடன் 4/5/2005 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்
எமது அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நிர்வாக அலுவலர்,
மாற்றிடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச்சங்கம்,
கரோட்,
ஏ 9 வீதி,
கிளிநொச்சி.

(சி.11823)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1976 01 02

உதிர்வு 2005 03 29

**திருமதி.ஜெயக்குமாரி ஜெயகாந்தன்**

அன்பும்,பண்பும்,கருணையும்,
ஆற்றலும்,பாசமும்,பெருமையும்
எனும் அன்பை நாடி இன்சொற்களால்
நகைப்புடன் பழகி எம் நிறுவனத்தின்
சுமை தாங்கியாய் காலத்தால் அழியாத
கலங்கரை விளக்கே வானத்தின் ஒளிதரும்
நட்சத்திரமாய் எம் இதயத்தில் ஒளி தரும்
தியாகமே உந்தன் நினைவுகளில் நனைந்தும்
உன் பிரிவால் துயருறும் உன் கணவன்,
பெற்றோர்,உறவுகளுடன் நாமும் உமது
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,
தமிழீழ நிர்வாகசேவை,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.11827)

# படையினரின் பொருளாதாரத் தடையை எதிர்த்து

# மூதூர் பகுதி மக்கள் கண்டனப் போராட்டம்

(திருகோணமலை)

சிமெந்து, முட்கம்பி, பற்றரி ஆகியவற்றை மூதூரில் கட்டைப் பறிச்சான் இராணுவ முகாம் ஊடாக எடுத்துச் செல்வதற்கு இராணுவத்தினர் தடைவிதித்துள்ளதை ஆட்சேபித்தும், தடையை உடனடியாக நீக்குமாறு கோரியும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மக்கள் நேற்று வியாழக்கிழமை காலை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

மூதூர் கிழக்குப் பிரதேச மக்கள் ஒன்றியம் ஒழுங்கு செய்த இப்பேரணியில் ஆயிரக்கணக்கான கிராம மக்கள் பங்குபற்றினர். மூதூர் கிழக்கின் சம்பூர்சேனையூர் மற்றும் ஊர்களிலிருந்து வந்த மக்கள் கணேசபுரத்திலிருந்து ஊர்வலமாகக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் பிரதேசம் நோக்கிச் சென்றனர். அங்கு வைத்து ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, மூதூர் பிரதேச செயலாளர், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் ஆகியோரிடம் மகஜர்களைக் கையளித்தனர்.

## இறுதி...

இவ் வெற்றிவிழா நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. இந்நிகழ்வின் பொதுச்சுடரினை மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுசா அவர்கள் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை வடபோர் முனைக் கட்டளைத தளபதி கேணல் தீபன் அவர்கள் ஏற்றினார். தொடர்ந்து மாவீரர் பொதுப்படத்திற்கு ஈகச்சுடரினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி அவர்கள் ஏற்றிவைக்க, தொடர்ந்து மலர் மாலைகளை தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தளபதி கேணல் ஜெயம், மற்றும் தளபதிகள் அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து போராளிகள், பொறுப்பாளர்கள் எனப் பலரும் மலர்வணக்கம் செய்தனர். சிறப்புரையினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார். இந்நிகழ்வில் போராளிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து தமிழீழ விளையாட்டுத்துறையால் நடாத்தப்பட்ட 90 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டி காலை 6.30 மணிக்கு புளியங்குளம் சோதனைச்சாவடி முன்பாக ஆரம்பமாகிப் பளை காவல் துறைச் செயலகத்திற்கு முன்பாக நிறைவடைந்தது.

இந் நிகழ்வை வட போர் முனைத் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் ஜெரி அவர்கள் ஆரம்பித்து வைத்தார். அத்துடன் வெற்றி பெற்ற முதன்மை வீரர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு காலை 9.30 மணியளவில் தமிழீழ விளையாட்டுத்துறைப் இணைப்பாளர் இன்பன் தலைமையில் இடம்பெற்றது. பரிசில்களும் வழங்கப்பட்டன. மேற்படி போட்டியில் மூன்றாம் இடம்பெற்ற வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தர்மராசா புஸ்பரத்தினம் என்பவருக்கு கேணல் ஜெயம் அவர்களும், இரண்டாம் இடத்தைப்பெற்ற வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வையாப்புரி திருச்செல்வத்திற்கு வடபோர் முனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபன் அவர்களும், முதலாம் இடத்தைப் பெற்ற வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.அஜந்தகுமார என்பவருக்கு தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா அவர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

மேற்படி நிகழ்வில் பல மாவட்டங்களில் இருந்தும் 50இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டார்கள்.

தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சிக் கல்லூரியிலும், இவ் வெற்றிவிழா நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. இந்நிகழ்வின் பொதுச்சுடரினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் அவர்கள் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கேணல் தீபன் அவர்கள் ஏற்றிவைக்க தொடர்ந்து ஒவ்வொரு படையணிகளினதும் கொடியினை அப்படையணியின் தளபதிகள்,சிறப்புத் தளபதிகள் ஏற்றிவைத்தனர்.

அடுத்து மாவீரர் பொதுப்படத்திற்கு தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் சுடரேற்றி மலர் மாலை அணிவித்ததையடுத்து ஒவ்வொரு படையணிகளாலும் முதல் வீரச்சாவடைந்த மாவீரர்களின் படத்திற்கு அவ்வப்படையணி களின் தளபதிகள், சிறப்புத் தளபதிகள் சுடரேற்றி மலர் மாலை அணிவிக்க, தொடர்ந்து நடைபெற்ற அரங்க நிகழ்வுகளில் போராளிகளின் நாட்டிய நடனங்கள் தமிழீழ தேசியத்தலைவரை வாழ்த்தி வாழ்த்து நடனங்களும், கவிதை நிகழ்வுகளும் இடம்பெற்றதோடு நடைபெற்ற மரதனோட்ட நிகழ்வுகள் மற்றும் கலை இலக்கியப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகளும் இடம் பெற்றன. பரிசில்களை தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை தளபதி கேணல் ஆதவன், தளபதி ரமேஸ்,தளபதி கேணல் ஜெயம்,தளபதி கேணல் தீபன், தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரசியல்துறை மகளிர் பொறுப்பாளா தமிழினி, தமிழீழ மருத்துவப் பிரிவு மகளிர் பொறுப்பாளர், செஞ்சோலை சிறுவர் இல்லப்பொறுப்பாளர், தமிழீழ நிதித்துறையைச் சேர்ந்த தமிழ்க்குமரன், நிதித்துறையின் வன்னியன் வாணிபப் பொறுப்பாளர் எனப் பலர் வழங்கிக் கௌரவித்தனர் சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளா சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து போராளிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச,தீ,கு)


## திரு இங்கிலிஷ்

வயது வந்தோருக்கு

திருநகரில் புதிய வகுப்புக்கள்

மே 05 ஆம் திகதி ஆரம்பம்.
மாலை 05:30 மணிக்கு

பெயர்களைப் பதிவு செய்யவும்.

சிறுவர்களுக்கு

நவீன ஆளுமைக்கல்வியுடன் கூடிய ஆங்கிலம்.
5 வயது முதல் 9 வயது வரை
மே 06 ஆம் திகதி ஆரம்பம்
கிழமை நாட்களில் மாலை 04.00
முதல் 06.00 மணிவரை.

பெயர்களைப் பதிவு செய்யவும்.

(சி.11812) நிர்வாகம்


## முஸ்லிம் இளைஞர் ஆயுதத்துடன் கைது

கொழும்புக்கருகில் பாணந்துறையில் ஆயுதத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீர்கொழும்பு காவற்துறையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் நேற்று இரவு ஒன்பது மணியளவில் சுற்றிவளைக்கப்பட்ட இவரது வீட்டில் ஒன்பது எம்.எம் துப்பாக்கியும் நான்கு ரவைகளும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் முஸ்லிம் வாலிபர் எனவும் எதற்காக ஆயுதத்தை வைத்திருந்தார் என்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காவற் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## கண்காணிப்புக்....

கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் இச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்துள்ளனர். சந்திப்பின் நிறைவில் கருத்துத் தெரிவித்த குயிலின்பன், தற்போது படையினரின் யுத்த நிறுத்த மீறல்கள் அதிகரித்து வருவதாகவும், குறிப்பாக நள்ளிரவு வேளைகளில் விசேட அதிரடிப்படையினர் கண்காணிப்புக்குழுவின் மேற்பார்வையின்றி அரசியல் அலுவலகங்களுக்குள் அத்துமீறி நுழைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார். இனிவரும் காலங்களில் படையினர் திட்டமிட்டு எமது அலுவலகங்களில் ஆயுதங்களை வைத்துவிட்டு விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் வைத்திருக்கின்றனர் எனக் கூற முனையலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இதன்போது கருத்துத்தெரிவித்த அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஜேம்ஸ் தொம்சன் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் பார்த்துக் கொள்வதாக உறுதியளி[illegible]ள்ளார்.

## பிரப ....

இச்சம்ப[illegible]ந்தைச் சிறிலங்காப் பொலிசாரும் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையில் தராக்கி என்னும் பெயரில் இராணுவத்தரப்புக் கட்டுரைகளையும், தமிழீழ ஊடகங்களில் சிவராம் என்ற பெயரில் கட்டுரைகளையும் எழுதி வந்தவராகும்.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவராம் ஏற்கனவே சிறிலங்கா ஆயுதப்படைகளின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தார். சில தடவைகள் கொழும்பிலுள்ள அவரது வீடு ஆயுதப்படைத்தரப்பினாலும் பொலிஸ்தரப்பினாலும் சோதனை யிடப்பட்டதோடு மட்டக்களப்பில் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சிறிலங்கா ஆயுதப்படையினரின் தாக்குதலுக்கும் உள்ளாகியிருந்தார்.

தற்பொழுது 'சிவராம்' 'தமிழ் நெட்' என்னும் இணையத்தளத்தின் கொழும்புத்தள நிருபராகச் செயற்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள் கருணா குழப்பம் விளைவிக்க முயன்றபோது தமிழ் தேசியத்திற்கு ஆதரவாக கருணாவின் நடவடிக்கைகளைக் கண்டித்து சிவராம் உறுதியாகக் குரல் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரானில் குரு முதல்வரின் இல்லம் மீது தாக்குதல்

மட்டக்களப்பு கிரான் மெதடிஸ்த குரு முதல்வரின் இல்லம் மீது நேற்று முன்தினம் இனம் தெரியாத நபர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரவு 10.30 மணிக்கு இல்லத்தின் சுற்றுப்புற முட்கம்பி வேலிகளை வெட்டி உள்நுழைந்த நபர்கள் குருமனைக்கும், பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கொட்டகைகளுக்கும் தீவைத்துள்ளனர். குருமனையில் ஒரு பகுதியும், கொட்டகைகள் இரண்டும் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இரு நபர்களினால் கைக்குண்டும் வீசப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. இச்சம்பவத்தின் போது குருமுதல்வர்களின் உதவியாளர் மட்டுமே அங்கு இருந்துள்ளனர்.

# கொலைக்குற்றம் தொடர்பில் சாரதி, நடத்துநர் மீது வழக்கு

அளவ்வ யாங்கல்மோதரப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தொடருந்து மற்றும் பேருந்து விபத்திற்குக் காரணம் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சாரதி, மற்றும் நடத்துநர் மீது கொலைக்குற்றம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.இதன் அடிப்படையில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்

# ஈ.பி.டி.பி. உறுப்பினர் மீதான தாக்குதல் குறித்து சந்தேக நபர்கள் இருவர் பொலிசாரால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி ஈ.பி.டி.பி அலுவலகம் முன்பாக நின்ற அக்கட்சி உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்கள் சிறிலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இடம பெற்ற இச்சம்பவத்தில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஞானி எனப்படும் அரியநாயகம் ரமேஸ் காயமடைந்துள்ளார். நீல நிற உந்துருளியில் பயணம் செய்தவர்களே இத்துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் வந்தாறுமூலையைச் சேர்ந்த சின்னவிஜயன், பெரியதம்பி ராஜ்குமார் ஆகிய இருவரும் சந்தேகத்தின் பேரில் ஏறாவூர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக நீதிபதி எம்.எல்.எம். அஜ்மீரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இவர்கள் இருவரையும் எதிர் வரும் 12 ஆம் திகதி அடையாள அணிவகுப்பு ஒன்றிற்கு உத்தரவிட்ட நீதிபதி அதுவரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# மக்களை மீளக் குடியமர்த்தக் கோரி யாழ்.இல் மக்கள் போராட்டத்திற்கு ஏற்பாடு

யாழ். குடாநாட்டில் மக்கள் போராட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக உள்நாட்டில் தொடர்ந்து இடம்பெயர்ந்து வாழும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் உடனடியாக இந்த மக்கள் மீளக் குடியமர்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்தியே இந்தப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.இது தொடர்பான ஏற்பாடுகளை இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் மேற்கொண்டுள்ளது

## தலைவரின்....

பெரும் நெருக்கடிகளை உருவாக்கியுள்ளன. அத்துடன் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாது என்பதையும் சிறிலங்காப் படைகள் உணர்ந்துள்ளன. ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சியுடன் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தீச்சுவாலை நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்தமையால் சிறிலங்காப் படையினர் தமது யதார்த்த நிலையை உணர்ந்துள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் பலத்தினை ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சியுடன் தான் சர்வதேச சமூகம் அறிந்து கொண்டது. ஆனையிறவுப் படைத்தளத்தினை புவியியல் ரீதியாக ஆராய்ந்த இராணுவ வல்லுனர்கள் விடுதலைப்புலிகளினால் ஆனையிறவினை வீழ்த்த முடியாது எனக் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந் நிலையில் விடுதலைப்புலிகளிடம் ஆனையிறவுப் படைத்தளம் வீழ்ந்தது என்பது விடுதலைப்புலிகளை சிறிலங்காப் படையினர் என்றுமே வெல்லமுடியாது என்பதை உணர்த்தியுள்ளது. விடுதலைப்புலிகளின் இராணுவ சக்தியை வெளிப்படுத்திய சமராக ஆனையிறவுத் தள வெற்றி அமைந்ததுடன், இதன் வெற்றிக்காக பரந்தனில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பகல் நேர சமர்கள், குடாரப்பு தரையிறக்கம் என்பனவும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை எனவும் கேணல் தீபன் தெரிவித்தார்.

## இளைஞர்.....

அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் மரணமானார். இவர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னாள் உறுப்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இ[illegible]த்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது